Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



தம்மம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.வ.சுலைமான் சேட்

ந.க.எண்.567/2024/அ1 நாள் :27.08.2024

பொருள் : மனைபிரிவு – சேலம் மாவட்டம் – தம்மம்பட்டி பேரூராட்சி – சர்வே எண். 326/3A1A1B, 326/11 –இல் 2.005 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துள்ளது – மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது – பேரூராட்சி மூலம் இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் எண். SLM/707AHQIB/19982/2023/2024/TCP நாள்.20.03.2024
2. திரு.ஓசுமணி மற்றும் இரண்டு நபர்கள் என்பவரின் விண்ணப்பம் நாள்.
3. தம்மம்பட்டி சார்பதிவாளர் பத்திர பதிவு எண்.493/2024 நாள்.27.02.2024.
4. தம்மம்பட்டி பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரின் சான்று நாள்.19.08.2024
5. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.436(11) நாள்.19.07.2024
6. தொடர்புடைய ஆவணங்கள்.

ஆணை

தம்மம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 326/3A1A1B, 326/11 இல் 2.005 ஏக்கர் நிலத்தில் திரு.ஓசுமணி மற்றும் இரண்டு நபர்கள் என்பவரால் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்கப்பட்டு, மேற்படி மனைப்பிரிவிற்கு சேலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெற்று வழங்கப்பட்டுள்ளதாகவும், அம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள், மூலை முடக்குகள் மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்கான பொது ஒதுக்கீடு ஆகியவற்றை அரசுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தம்மம்பட்டி பேரூராட்சி மூலம் இறுதி ஒப்புதல் வழங்கக் கோரி திரு.ஓசுமணி மற்றும் இரண்டு நபர்கள் என்பவரால் இணையதளத்தில் விண்ணப்பத்தின்படி கோரப்பட்டுள்ளது.

பார்வை 3 இல் காணும் தம்மம்பட்டி சார்பதிவாளர் அவர்களின் பத்திர பதிவின்படி மேற்படி மனைப்பிரிவில் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அமைந்துள்ள சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் உட்பட 2753.81 சதுர மீட்டர் மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்கான பொது ஒதுக்கீடு 28.35 சதுர மீட்டர் உள்ள இடங்களை அரசுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலை மற்றும் சாலையின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் வடிகால்கள் தம்மம்பட்டி பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு அவை தரமானதாக உள்ளதாகவும், 12 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் பார்வை 4 இல் காணும் விபரப்படி தம்மம்பட்டி பேரூராட்சி தொகுப்பு இளநிலை பொறியாளரால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசுக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் உட்பட 2753.81 சதுர மீட்டர் மற்றும் உள்ளாட்சி பயன்பாட்டிற்கான பொது ஒதுக்கீடு 28.35 சதுர மீட்டர் உள்ள பகுதிகளை பேரூராட்சி மூலம் தானமாக பெற்றுக்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 5–இல் காணும் விவரப்படி இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்படி மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் அரசு தலைப்பில் செலுத்த வேண்டி ரூ.474245/- யும் மேலும் பேரூராட்சி கணக்கில் செலுத்த வேண்டிய கீழ்கண்டவாறு கட்டணம் ரூ.354526/- யும் ஆகமொத்தம் ரூ.828771/- இப்பேரூராட்சி இந்தியன் வங்கி கணக்கு எண். 7316064296 நாள்.26.08.2024 ல் தொகை வரப்பெற்றுள்ளது.

அரசு தலைப்பில் செலுத்த வேண்டியது		
1)	தம்மம்பட்டி சார்பதிவாளர் கடிதம் எண்.262/2024-1 நாள்.03.07.2024இன்படி சர்வே எண். 326/3A1A1B, 326/11-ற்கு ஒரு சதுரஅடிக்கு ரூ.181/- என்ற சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் 3% சதவீதம் கட்டணம் ரூ. 474245/- (87338 x 181=15808178 x 3%=474245/- (0217 Urban Development – 60 other Urban Development Schemes – other Receipts –AS Receipts under Land use conversion Charges –2 27 Non Taxation Fees –09 collections (DPC 0217-60-800-AS 22709))	ரூ.474245/-
பேரூராட்சி கணக்கில் செலுத்தியது		
2)	கூராய்வு கட்டணம் (ரூ.1000 x 45 மனைகள்)	ரூ.45000/-
3)	மனைப்பிரிவு மறு சீரமைப்பு கட்டணம் (1 ச.மீ 1.50/-) 2.005 Acre to Square Meter 8113.95 சதுர மீட்டர் x 1.50	ரூ.12171/-
4)	மனைப்பிரிவு மறு வகைப்பாடு (Lumpsum)	ரூ.20000/-
5)	1) காலியிட வரி (0.40 Paise) per sq.ft 2.005 Acre to Square Feet 87335 சதுர அடி x 0.40 (இரண்டு அரையாண்டிற்கு)	ரூ.69868/-
6)	2) காலியிட வரிக்கு நூலக வரி 10%	ரூ.6987/-
7)	சென்னை நகராட்சி நிர்வாகம் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின்படி(ந.க.எண்.12843/2022/டிபி-2 நாள்.20.10.2022 பராமரிப்பு பணிக்களுக்கான திரும்ப செலுத்தக்கூடிய டேவணி தொகை ரூ.1,00 இலட்சம் ஒரு ஏக்கருக்கு என	ரூ.200500/-
	மொத்தம்	ரூ.354526/-

எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் மற்றும் அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனைகளை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தகைகள் நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.

4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR–2019 இல் குறிப்பிட்டுள்ள Residential Use–இல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப்பாதை / தந்திக் கம்பிப்பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அதன் அளவீடுகளை பொறுத்து நகர் ஊரமைப்பு அல்லது செயல் அலுவலரின் அனுமதி பெற வேண்டும்.
9. மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மானம் எண்ணும், நாளும் மன்றத்திற்கும் மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்
11. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
12. மனைப்பிரிவு அமையும் புல எண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பப்பட்டால் மனைப்பிரிவிற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
13. பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020 இன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.
14. கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.
15. மேற்படி சாலைகளை பொது சாலையாக சர்வே காலங்களில் வரையறை செய்வதற்கான உட்பிரிவுத் தொகையினையும் இப்பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

16. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீ அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒரு பக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறவெளி விடப்பட வேண்டும். 10 மீட்டர் வரை அகலமுடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்படவேண்டும்.
17. ஒவ்வொரு மனையின் பின்புற எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் மனையின் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 3 மீட்டர் அளவுள்ள திறந்தவெளி இருத்தல் வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, கழிப்பறை, எருகுழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்தும் கொட்டகை போன்றவை அல்லது அவைபோன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச் சார்ந்த கட்டடங்கள் மட்டுமே அமைக்கப்படவேண்டும். ஆனால் கட்டடங்கள் மொத்தமாக பின்பக்க எல்லையின் நீளத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் மனையின் பின்பக்க நிலமட்டத்திலிருந்து 3.00 மீட்டர்/3.75 மீட்டர் உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
18. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதியில் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின் படி மனையின் பரப்பில் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்பட கூடாது. கட்டிடம் கட்டாமல் விடப்படும் திறந்த வெளியினை தோட்டமாகவோ திறந்த முற்றமாகவோ தனிப்பட்ட பயன்பாட்டிற்காகவோ தூய்மையாக பராமரிக்க வேண்டும்.
19. கடைக்கால் (Foundation) போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர் செய்யவோ, மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்துதலோ கூடாது.
20. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

இணைப்பு –வரைபடம்

செயல் அலுவலர்,
தம்மம்பட்டி சிறப்பு நிலை பேரூராட்சி,
சேலம் மாவட்டம்

27.8.24

பெறுதல்

திரு.ஓசுமணி மற்றும்
இரண்டு நபர்கள்,
தண்ணீர் பந்தல்
தம்மம்பட்டி – 636 113
சேலம் மாவட்டம்

நகல்


1. சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்
3. சார்பதிவாளர், தம்மம்பட்டி
4. இருப்பு கோப்பிற்கு

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - சேலம் மாவட்டம்

தம்மம்பட்டி பேரூராட்சி

சேலம் மாவட்டம், செங்கவல்லி வட்டம், தம்மம்பட்டி பேரூராட்சி, தம்மம்பட்டி கிராமம், சர்வே எண்கள்: 326/3A1A1B, 326/11-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைப்படம். (திட்டமில்லாத பகுதி)

கோப்பு எண்	:	SLM/TCP/AHQ/B/19662/2023
இணையதள விண்ணப்ப எண்	:	TCP/AHQ/B
அளவு	:	1:800



நிபந்தனைகள்:

1. அரசாணை எண் 18, நகராட்சி நிர்வாகம் (ம1) துறை, நாள் 04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 10, நகராட்சி நிர்வாகம் (ம1) துறை, நாள் 31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண் 181, வீட்டு வசதி (ம1) துறை, நாள் 09.12.2020-ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. நிலவகைபிரிவு, உபயோகம் திறன் முழுமை அளிப்பது முன் இடத்தினை எந்தத் துறையுடன் நீர் ஆதாரம் மேற்கொள்ளப்படவில்லை என்றால், எந்த துறைக்காவது நீர் ஆதாரம் பயன்பாட்டிற்கு ஏதாவது ஆட்சேபனை இல்லை என்றால், உள்ளாட்சி வசமான உத்தரவு பெறுவதற்கான வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழக்குகள், சமரசங்கள் மற்றும் பிரிவினைக்கு வரப்பெற்றால், ஆணைகள் சரியான அல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொடர்புடைய முழுமை வழங்கியதால் பாதிப்பு ஏற்படுவதாகவும் குறைவு ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழிலாட்சி முழுமை வழங்கியதால் இதர நில ஊரமைப்பு ஆணைகள் அனைவரை ரத்து செய்யப்படும்.
6. விற்கவேண்டிய மனைகளை விற்கவும் செய்யும் வேறு நிலைகளில் தங்களோடு நல்ல ஊரமைப்பு நலனில் முழுமை அளிக்கவும், வரைக நில் மனை விற்கவும்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நில ஊரமைப்பு துறை உபயோகமாக தொழிலாட்சி அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் மேல் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தியதாக தொழிலாட்சி அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்தை வரவேற்று ஆணையாளரின் விளம்பரத்திற்கு - நாட்டாண்மைத்தில் - பத்திரிகை - தினசரி நாளிதழ்களில் - பொது அறிவிப்பாளரிடம் மேலும் பல விண்ணப்பதாரர் வரவேற்பு செய்ய உரிமை உள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே வரவு விடுவதற்கு வேண்டும். மேலும் அதன் மேல் வேறு எதிலோ நபர் தன் உரிமை கோரினால் அவர்கள் அதனை கொடுத்தால் தகுதியான தீர்வைகளுக்கு முன் நிபந்தனைகளை இதன் மூலம் செய்ய நில் ஊரமைப்பு துறை பொறுப்பாக அவசியம் அல்ல.
8. நிதிவசதி பார்க்கப்பட்டு வரைக கட்டிட அப்பட வேண்டும்.
9. முழுமை அளிக்கப்பட வேண்டிய வகை நகர் எந்த வீடு மற்றும் விழுமியத் மனைப்பிரிவு நலனுமில்லை எல் அவசியம் நிற்கு நகலையை மூல பொதுக்கல் பாலைக்கு நிதியாக பிரிக்கப்பட வேண்டும்.
10. நிர்வாகி வழங்கு வீடுகள் நிலவரம் இதற்கு இந்துறையில் மனைப்பிரிவு அனுமதி செலுத்துகிறது அல்ல.
11. நிர்வாகம்பிரிவிற்கு அருகில் உள்ள நிர்ணயித்த செலுத்த வரைக்கு நிலம் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு சாலைகளின் மூலங்கு சாலைகள் செல்லை மதிக்கும் எல்லாம் வழங்கான வரைக்கு நிலம் மாவட்டத்தின் அலுவலர் வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் நாள் சாலை அமைக்கப்பட்டு (RECOS) மாவட்ட ஊரமைப்பு பணிகள் பொறியாளர் அவர்களிடம் நாள் பதிப்பு நாட்களுக்கு பெறப்பட்டு மின்னல் சாலை இதற்கு முழுமை வழங்கப்பட வேண்டும்.
13. மனைப்பிரிவின் வரி வழங்கு மற்றும் உபயின் அடிப்படை வரி மனு செலுத்தியின் அல்லை வழங்கி நல் சொத்து சேவைகள் சேர்க்கை மாற்றிமைக்கப்பட வேண்டும்.

நிலப்பயன்பாடு

1. மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு	:	2.005 ஏக்கர் (அ) 8113.95சதுர மீட்டர்
2. மொத்த மனைகள்	:	45
3. ஒதுக்கிய மனைகள்	:	37
4. மனைப்பிரிவு எல்லை		
5. நிலைமில் உள்ள சாலை		
6. புல்வெளி (கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி - 194.00 சதுர மீட்டர்)		

A.பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டவை)

1.உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு	:	2753.81 சதுர மீட்டர்

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/BA2, நாள்.05.02.2020-ன் படி 10% பூங்காவிற்கான அரசு வழிகாட்டு மதிப்பிலிடப்பட்டு தொகை மனுதாரர் செலுத்துவதற்கப்பட்டுள்ளது.

B.பொது உபயோகம்: (TNCDABR 2019 47)ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

1.உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட (PP1) மனைப்பரப்பு	:	28.35சதுர மீட்டர் (0.53%)
2.(TANGEDCO) ஒதுக்கப்பட்ட (PP2) மனைப்பரப்பு	:	32.50சதுர மீட்டர் (0.60%)

மூலை முடக்கு

7.2மீ அகலம் முதல் 12.0மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ விட்டம்மல் வேண்டும்.

APPROVAL NO: SWP/DTCP/SALEM/LAYOUT NO: 67/2024

Signature valid
Signed by: Assistant Director
Location: Salem
Date: 2024.03.20 19:08:18

Signature valid
Signed by: Executive Officer
Location: Salem
Date: 2024.08.28 15:40:14

கா.துர்கேஸ்வரி
அளவர்உதவி வரைவாளர்

ராகேஷ் ரவி
வரைவாளர் நிலை - III

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்.

Layout Application - Final Approval Letter

Roc No: 567/2024

Date: 8/28/24 3:37 PM

From:

Executive officer

275,Trichy Main Road ,Thammampatty,Gangavalli (Tk),Salem (Dt),636113

To :

Online Application Number: 7O7AHQIB

Sir/ Madam,

Sub :

Ref :

Body:

Signature valid

Signed by: Executive Officer
Location:Salem
Date:2024.08.28 15:37:05

Executive officer



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate